

# பாச்சோறு

குழந்தைப் பாடல்கள்

பெருஞ்சித்திரனார்

# பாச் சோறு

(குழந்தைப் பாடல்கள்)



பாவலரேறு
**பெருஞ்சித்திரனார்**




| | | |
|---|---|---|
| நூல் | : | பாச்சோறு |
| வகை | : | குழந்தைப் பாடல்கள் |
| ஆசிரியர் | : | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| பதிப்பு | : | தி.பி. 2037 ஆடவை 18 (2.7.2006) |
| வெளியீடு | : | திருவள்ளுவர் கல்விப்பணி அறக்கட்டளை, 419, மங்கலம் சாலை, பல்லடம் - 641 664. |
| அச்சாக்கம் | : | திலகா மறுதோன்றி அச்சகம் 6வது வீதி தொடர்ச்சி, காந்திபுரம், கோவை - 12. ✆ 2526005 |
| விலை | : | ரூ.20/- |



இன்றைய பயனோ நேற்றைய உழைப்பு
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியா திருப்பது புகழே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

# என்னுரை

குழந்தைகளுக்குத் தொடக்கத்தில் வேண்டியவை பாலும் சோறும்; பாட்டும் கதையும்; ஆட்டமும் பயிற்சியும்; ஓய்வும் உறக்கமும்!

வளர வளரத்தான் அவர்களுக்கு கல்வியும் கருத்தும் ஒழுக்கமும் உலகமும் வேண்டும்!

கல்வியைக் கற்கத் தொடங்கு முன் ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் தாய்மடியே பள்ளிக்கூடம்!

அவள் தாலாட்டே முதல் பாடம்!
நிலாப்பாட்டே அதற்குக் குழந்தைப் பாவியம்!

அதன் பின்னர்தான் அதன் ஆசிரியப் பணியேற்று வேறுசில கருத்துப் பாடல்களையும் உருவகக் கதைகளையும் கற்பித்து, அதன் கற்பனை வளத்தைப் பொங்கச் செய்கின்றார், தந்தை!

மூன்றாம் படியாகத்தான் ஆசிரியர் பங்கேற்று படிப்படியாக ஒழுங்கையும் உலகத்தையும் உணர்த்துகின்றார். இந்த மூன்று படிநிலைகளிலும் செப்பமாகப் பேணி வளர்க்கப் பெற்ற நல்ல குழந்தைகளே உலகைத் தன்வயப்படுத்தி உலகுக்குத் தானுதவிப் புகழ் பெறுகின்றன! அவ்வாறல்லாத பிறவோ உலகைப் புண்படுத்தி-உலகைத் தனக்காக்கி-இகழைப் பெறுகின்றன.

குழந்தை இலக்கியம் கழகக் காலத்திலும் உண்டு.

ஊழி ஊழியாய் வளரும் மாந்தக் குமுகாயத்தின் அடியூற்றாகக் கிளர்ந்தெழும் குழந்தை உணர்வுகள் என்றும் அழிந்து போகாமல் ஒவ்வொரு மாந்த உள்ளத்தின் அடித்தளத்திலும் படர்ந்து கிடக்கின்றன. அவை அவனைச் செழுசெழுப்பாக்கி வளரச் செய்கின்றன; வாழச் செய்கின்றன; மகிழச் செய்கின்றன; மங்காமல் என்றென்றும் நிலைநிற்கச் செய்கின்றன.

குழந்தை மனந்தான் கொழுமை மனம்! மாந்தத்திற்கு வேண்டிய கரு மனம்!

ஆனால் உலக வினைவெப்பத்தில் அம்மனம் காய்ந்து, கருகி, உலர்ந்து, உதிர்ந்து விடுகின்றது!

அதை அப்பொழுதைக்கப்பொழுது உணர்வு நீருற்றி உலராமல் வைத்துக்கொள்ள இலக்கியங்கள் உதவுகின்றன. குழந்தை இலக்கியங்களோ, முளையையும் சாம்பிவிடாமல் இலையையும் கருகிவிடாமல் காத்து நிற்கப் பயன்படுபவை.

பள்ளிக்குப் பறக்காத குஞ்சுகளுக்கும், பள்ளிக்குப் பறந்து செல்லும் பறவைகளுக்கும் அவ்வப் பொழுது வடித்த பாடல்கள் இவை.

இக்கால், இவை, 'பள்ளிப்பறவைகள்' என்னும் பெயரால் முதல் தொகுப்பாக வெளியிடப் பெறுகின்றன.

இப்பெயர் வரிசையில் இரண்டாம் தொகுப்பும் பின்னர் வெளியிடப்பெறும்.

இவற்றுள் ஒரு சில தவிர, மற்றவை முன்னரே தென்மொழியிலும் தமிழ்ச்சிட்டிலும்(குரல் 4 இசை 2-3 முடிய) வெளிவந்தவை.

இப்பாடல்களை முன்னமேயே மனப்பாடம் செய்து பாடிய குழந்தைகள் பல. பல நிலைகளிலும் அவை அவற்றை என் முன்னர் பாடி மகிழ்வித்திருக்கின்றன. இத்தொகுப்பு அவற்றிற்கு மேலும் ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்குமாறு பக்கத்திற்குப் பக்கம் வண்ணப் படங்களுடன் வெளியிடப்பெறுகின்றது. தமிழ்ச்சிட்டைத் தொடக்கத்திலிருந்து படித்தறியாத குழந்தைகளுக்கோ இத்தொகுப்பு ஓர் அரிய பெட்டகமாகும்.

சிறுவர்களின் பாடப் பொத்தகங்களில் இடம்பெற வேண்டிய பாடல்கள் இவை.

பள்ளிகளில் பரிசளிக்கக் கூடிய நூல் இது.

பயன்படுத்திக் கொள்பவர்களின் திறனையும் அறிவையும் பொறுத்தது இதன் பயன்!

எதிர்காலத் தமிழகத்திற்கு என் படையல் இது!

இதனைப் பொத்தகமாக வெளியிட்டு உதவிய இராசிபுரம் வள்ளுவர் நூலகத்தார்க்கும் இதற்கு வேண்டிய ஓவியங்கள் வரைந்துதவிய ஓவியர் திரு. சின்னையன் அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி.

அன்பன்

கடலூர்-1.
க.துலை.திபி.உயயகூ (17-10-72) பெருஞ்சித்திரன்.

# பதிப்புரை

பிறந்ததிலிருந்து நாம் பேசுகின்ற தாய்மொழிதான் நம் பழக்கவழக்கங்களை உருவாக்குகின்றது. பழக்க வழக்கங்கள்தாம் பண்பாடாக மிளிர்கிறது. ஒரு சில நொடிப்பொழுது எண்ணினால் இவ்வுண்மை விளங்கும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழக வெகுமக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டமையால் மொழி எவ்வாறு சிதைக்கப் பட்டது என்பதைக்கூட அறியாமல் வாழ்ந்த நிலை ஓர் அவலமாகும். கடந்த ஆயிரமாண்டாகத் தொடர்ச்சியாகத் தமிழ் மன்னர்கள் அரசாட்சியை இழந்தது தமிழின வரலாற்றின் இருண்ட பகுதியாகும். இக்கால கட்டத்தில்தான் தமிழன் தன் வயிற்றுப் பிழைப்புக்காக அடிமைச்சேற்றில் புதைந்து ஆதனை இழந்தான்.

கோயில்களிலும் கல்வி நிலையங்களிலும் அரசு அலுவலகங்களிலும் தமிழ் வழக்கிழந்தமையால் நேர்ந்துள்ள நலிவுகள் இருந்து வர, அண்மைக் காலமாகச் செய்தி இதழ்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி முதலான ஊடகங்களின் தமிழ்க்கொலை, சிற்றூர்ப்புற வெகுமக்களின் வழக்காறுகளைக்கூட விட்டுவைக்கவில்லை. வீடுகளில் 'சாறு' இல்லை 'ரசந்'தான், 'சோறி'ல்லை 'சாதம்','ரைஸ்' தான்.

தமிழ் என்பது இப்பொழுது வெறும் மேடைகளில், பட்டிமன்ற, பாட்டரங்குகளில்

கொச்சைப் பொழுதுபோக்கு மொழியாக மட்டுமே உள்ளது. வளரிளங் குழந்தைகளுக்குக் கூட இனிய எளிய தமிழ்ப்பாடல்கள் கற்பிக்க வாய்ப்பில்லை. இன்னும் ஐம்பதாண்டுகளில் 'டமிளர்'கள் இருப்பார்கள், வாயில் 'டமிங்கலம்' வாழும். இந்நிலை மாறவேண்டும் எனும் வேட்கையே இச்சிறுநூல். இது வீட்டிலுள்ள தாய்மார்களுக்குதவும் கையேடாகும். இப்பாடல்கள் சிலவற்றை இசைப் பேழையாக்கும் திட்டம் உள்ளது.

'பள்ளிப் பறவைகள்' நூலின் முன்னுரையில் பாட்டும் கதையும் குழந்தைகளுக்குப் பாலும் சோறும் எனப் பாவலரேறு குறித்துள்ளமையால் இப்பாடல் தொகுப்பு 'பாச்சோறு' எனப் பெயர்பெறலாயிற்று. அந்நூல் முன்னுரையின் அருமையும் பயனும் கருதி அம்முன்னுரையே இந்நூலுக்கும் முன்னுரையாகக் கொடுக்கப் பெற்றுள்ளது.

தங்கள் திருமணத்தின்போது பாவலரேறு அவர்களின் 'தமிழா எழுச்சிகொள்' நூலினை வெளியிட்டு மகிழ்ந்த வெள்ளிங்கிரி - பத்மாவதி இணையர், தம் மகள் மலர்விழி - இரமேசுகுமார் திருமணத்தையொட்டி இந்நூலை வெளியிட முன்வந்தமைக்கு நமது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன. இதனைத் தொகுக்க உதவிய திருப்பூர் ப. துரையரசன், பல்லடம் செ. திருமேனி, சீனி. செந்தேவன் ஆகிய தமிழ் நெஞ்சங்களுக்கும் வெளியிட இசைவு தந்த பாவலரேறு குடும்பத்தார்க்கும் விரைந்து அச்சிட்டு வழங்கிய திலகா மறுதோன்றி அச்சகத்தார்க்கும் நன்றி.

திருப்பூர்
27.2006

வெளியீடு : திருவள்ளுவர்
கல்விப்பணி அறக்கட்டளை

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தனித் தமிழுணர்வை எல்லாத் திசைகளும் ஏந்தச் செய்தவர் பெருஞ்சித்திரனார்.

தமிழின் மொழிநடை வடிவங்களிலும் யாப்பு வடிவங்களிலும் தனிமுத்திரை பதித்த பேராற்றல் இவர் எழுத்திற்கு உண்டு.

சேலத்தில் இரா. துரைசாமி - குஞ்சம்மாள் இருவரின் மகனாக 10-03-1933 இல் பிறந்து 11-06-1995 இல் - 62ஆம் அகவையில் மறைந்த இவரின் வாழ்வு, தமிழ்க்காப்புப் போராட்ட வாழ்வாகத் திகழ்ந்த பெருமையுடையது.

இந்தித்திணிப்பை எதிர்க்கும் கனல் தெறிக்கும் பாடல்களால்

மொழிப்போர்த் தீயைத் தமிழ்நாட்டில் மூளச்செய்த இவர் 1965இல் சிறைப்படுத்தப் பட்டார்; அதனால் 12 ஆண்டுகளாகப் பணியாற்றிவந்த அஞ்சல் துறைப் பணியை இழந்தார்; முப்பத்திரண்டு அகவையிலிருந்து முழுநேரத் தமிழ்ப்போராளியாகத் தமிழ்நாட்டை வலம் வரத்தொடங்கினார். இந்தி எதிர்ப்பு, மனுதரும எரிப்புக்கான சிறை வாழ்வு இவர் ஏற்றுக் கொண்டவை. 'மிசா', தடாச் சிறை வாழ்வு இவர் மீது திணிக்கப்பட்டவை. தொடர்ந்த உளவுத்துறை ஒற்றாடல்கள் இவரோடு உடனுறைந்தவை.

துரை. மாணிக்கம் என்பது இவரின் இயற்பெயர். பாவாணரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்ட உலகத் தமிழ்க்கழகத்தின் முதல் பொதுச் செயலாளராகத் திகழ்ந்தவர். பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாகவும், தமிழக அரசுத்திட்டமாக அது ஏற்கப்படவும் வழிவகுத்தவர். ஐயை, பாவியக் கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு(மூன்று தொகுதி), எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய இவரின் பாடல் நூல்கள் தனிச்சிறப்பு மிக்கவை.

தமிழுக்கு அரிய கருவூலமாய் அமைந்தது இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை.

தமிழ்மொழி மேம்பாட்டைச் சிந்திக்கும் எவரும் பெருஞ்சித்திரனாரின் எழுத்தையும் வாழ்வையும் சிந்தித்தே தீரவேண்டும்.

- செந்தலை ந. கவுதமன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அம்மா | 13 |
| 2. | தாய் | 14 |
| 3. | அப்பா | 15 |
| 4. | பாட்டி | 16 |
| 5. | அன்னை | 17 |
| 6. | கண்ணாம்பூச்சிப் பாட்டு | 19 |
| 7. | ஊஞ்சல் ஆடு | 20 |
| 8. | பாப்பா படி | 21 |
| 9. | விளையாட்டு | 22 |
| 10. | உடற்பயிற்சி | 23 |
| 11. | குழந்தை | 24 |
| 12. | வேண்டும் | 25 |
| 13. | குருவி | 26 |
| 14. | காக்கைப் பள்ளிக்கூடம் | 27 |
| 15. | சேவல் | 28 |
| 16. | நாய்க்குட்டி | 29 |
| 17. | பூனை | 30 |
| 18. | ஒலிகள் | 31 |
| 19. | ஆசை | 32 |
| 20. | நிறங்கள் | 33 |

21. முயற்சி 34
22. பாதையில் நடத்தல் 35
23. மின்சாரம் 36
24. குடையும் செருப்பும் 37
25. புகைவண்டி விளையாட்டு 39
26. வீட்டைக் கட்டினான் 41
27. கடல் 42
28. நிலா 43
29. கடிகாரம் 44
30. மிதமாய் உண்பது மிகுதியும் இன்பமே 45
31. பள்ளிக்குப் போ 46
32. திருக்குறள் 47
33. பத்துக் கட்டளைகள் 48
34. உழைப்புக்கு விளைவுண்டு 49
35. பாவேந்தர் பாரதிதாசன் 50
36. நாள் ஒழுக்கம் 51
37. அணி பொருள் 52
38. பொன்னன் கதை 53
39. பழியன்றோ மிஞ்சும் 55
40. தமிழ் படித்தால் வாழ்வு புதுமை பெறும் 56

# அம்மா !

அம்மா மிகவும் நல்லவள்!
ஆட்டித் தூங்கச் செய்தவள்!


இளைக்கக் கண்டு அழுதவள்!
ஈயை ஓட்டி நின்றவள்!

உழக்கு நெய்யைச் சோற்றிலே,
ஊற்றிப் பிசைந்து கொடுத்தவள்!

எடுத்துத் தூக்கி அணைத்தவள்!
ஏணை கட்டிப் போட்டவள்!

ஐயன் அப்பன் என்றவள்!
ஔவைக் கதையைச் சொன்னவள்!

ஒப்ப னைகள் செய்தவள்!
ஓயா தென்னை காப்பவள்!





# தாய்

அழுதால் பாலை ஊட்டி,
அணிகள் வாங்கிப் பூட்டி,
பழுதில் லாமல் காப்பாள்!
பட்டுச் சட்டை போர்ப்பாள்!

மடியில் தூங்கப் பண்ணி,
முடியை வாரிப் பின்னி,
வெடித்த பூவைச் சூட்டி,
வளர்ப்பாள் அன்பைக் காட்டி!

இடையில் வைத்துத் தாங்கி,
இரவில் காத்துத் தூங்கி,
நடையைக் கற்றுக் கொடுப்பாள்!
நலிவை என்றும் தடுப்பாள்!

பெற்றாள்; காத்தாள் சேயை!
பணிவேன் அன்புத் தாயை!
கற்றுத் தந்தாள் கல்வி!
கண்ணைப் போன்ற செல்வி!



# அப்பா

கையிலே ஓர் குடை!
காலில் செருப்பு நடை!
மெய்யில் வெள்ளை உடை!
மெதுவாய்ப் போவார் கடை!

அப்பா' அதற்கு விடை;
அம்மா சொல்வாள் தடை!
தப்பாமல் ஓர் வடை
தருவாள் முதுகில்; துடை;

பாடஞ் சொல்லச் செய்வார்!
படிக்கா விட்டால் வைவார்!
ஆடல் பாடல் சொல்வார்!
அன்பைக் காட்டி வெல்வார்!

வேண்டும் பொருளைச் சேர்ப்பார்!
வீட்டை என்றும் காப்பார்!
நீண்ட மீசைக் காரர்!
நம்மேல் ஆசைக் காரர்!





# பாட்டி

கூன் விழுந்த பாட்டி,
குட்டைக் காலை நீட்டிப்
பாலுஞ் சோறும் ஊட்டிப்
படுக்க வைப்பாள் ஆட்டி!

ஈரும் பேனும் பார்ப்பாள்!
எங்கும் தூய்மை சேர்ப்பாள்!
நோயை நன்கு தீர்ப்பாள்!
நாளும் அன்பை வார்ப்பாள்!

அண்டை வீடு செல்வாள்!
அரட்டை பேசி வெல்வாள்!
கொசுவை ஈயைக் கொல்வாள்!
கோடிக் கதைகள் சொல்வாள்!




# அன்னை

உன்னைக் கொண்டு வந்தே, இவ்
உலகில் விட்டது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

கண்ணைப் போல உன்னையே
காத்து வருவது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

எண்ணெய் இட்ட விளக்குப் போல்
இரவில் காத்தது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

உண்ண உண்ணப் பாலையே
ஊட்டிக் கொடுத்தது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!



கண்ணே! மணியே! என்றுன்னைக்
கட்டிக் கொண்டது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

பொன்னே! பூவே! என்றுன்னைப்
போற்றிப் புகழ்ந்தது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

உன்னைக் காக்க மருந்துண்டே
உணவை வெறுத்தது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!

மண்ணில் இன்றும் என்றும் நீ
மறவா திருப்பது யார் சொல்?
அன்னை! அன்னை! அன்னை - என்
அன்னை! அன்னை! அன்னை!


# கண்ணாம்பூச்சிப் பாட்டு!

(மழலை நடை)

அங்கயற் கண்ணி வந்தாளாம்;
அப்பா துண்டைக் கண்டாளாம்!
இடுப்பு நிறையக் கொசுவம் வச்சே
எடுத்துக் கட்டிக் கொண்டாளாம்!
பட்டுப் பூச்சி, சேலை கட்டிப்
பார்த்துப் பார்த்துச் சிரிக்குதாம்!
சிட்டுக்குருவி, கொண்டை போட்டுச்
சிரித்து சிரித்து மகிழுதாம்!

எல்லோரும் வாருங்க!
இந்தப் பொண்ணைப் பாருங்க!
பல்லோரந் தெரிகின்ற
பழச்சிரிப்பைக் காணுங்க!
எங்க பொண்ணு அரசி;
எந்த அரசன் வருவான்?
சிங்கப்பூரு போயி வந்த
சிற்றரசன் வருவான்!

வரட்டும்; வரட்டும்!
வட்ட வட்டப் பொண்ணைத்
தரட்டும் தரட்டும்
தாவிப் பிடிக்கட்டும்!
கண்ணாம் கண்ணாம் பூச்சி!
காட்டு மரப் பூச்சி!
பொண்ணுக் கேத்த மாப்பிளையைப்
போய்ப் பிடிச்சுக் கூட்டிவா!




## ஊஞ்சல் ஆடு!

ஆடு ஊஞ்சல் ஆடு!
அன்னைத் தமிழ் பாடு!
பாடுபவள் காதிரண்டில்
பச்சைமணித் தோடு!

காற்றில் முடி ஆட,
கைவளைகள் பாட,
ஆற்றில் அலை பாய்வதுபோல்
அங்கு மிங்கும் ஓட,
ஆடு ஊஞ்சல் ஆடு!





# பாப்பா படி

பாப்பா பாப்பா படி!
பாட்டும் கதையும் படி!

அம்மா சுட்டாள் தோசை!
அதன்மேல் இல்லை ஆசை!


பாட்டும் கதையும் வேண்டும்!
படிப்பே அறிவைத் தூண்டும்!

விளக்கே இருளைப் போக்கும்!
வெளிச்சம் எங்கும் சேர்க்கும்!

படிப்பே மடமை ஓட்டும்!
பரந்த அறிவைக் கூட்டும்!

பாப்பா பாப்பா படி!
பணிவும் அன்பும் படி!





# விளையாட்டு

பந்தைத் தூக்கிப் போடு!
பசிக்கப் பசிக்க ஆடு!


மூச்சைப் பிடித்துப் பழகு!
முகத்தில் தோன்றும் அழகு!

நீளம் உயரம் தாண்டு!
நீ வளர்வாய் நீண்டு!

நாளும் நீரில் நீந்து!
நல்ல மார்பை ஏந்து!

முன்னும் பின்னும் வளை!
முகத்தில் மிளிரும் களை!

மாலை வெய்யில் குளி
மடிமை என்றும் ஒழி!



# உடற்பயிற்சி

ஒன்று இரண்டு சொல்லுங்கள்!
ஓடி வந்து நில்லுங்கள்

மூன்று நான்கு எண்ணுங்கள்!
முதுகை ஒட்டப் பண்ணுங்கள்!

ஐந்து ஆறு கூறுங்கள்!
அரசக் குதிரை ஏறுங்கள்!

ஏழு எட்டு கொட்டுங்கள்!
எல்லாம் கையைத் தட்டுங்கள்!

ஒன்பது பத்து சொல்லுங்கள்!
உடலை நிமிர்த்தி நில்லுங்கள்!

கைகளை மேலே தூக்குங்கள்!
கால்களை அகற்றி வையுங்கள்!

பக்கவாட்டில் சாயுங்கள்!
பாதந்தொட்டுக் குனியுங்கள்!

முன்னும் பின்னும் சாயுங்கள்!
முதுகுப் பக்கம் வளையுங்கள்!

மூச்சை இழுத்து வாங்குங்கள்!
முப்பது வரையில் அடக்குங்கள்!

அடக்கிய மூச்சை அகற்றுங்கள்;
அகன்ற மார்பைச் சுருக்குங்கள்!

கழுத்துப் பயிற்சி செய்யுங்கள்!
கால்களை மாற்றிக் குதியுங்கள்!



விளையாட் டெல்லாம் முடிந்ததும்
வீட்டை நோக்கிச் செல்லுங்கள்!

*பாவலரேறு பெருஞ்சித்திரனார்*



# குழந்தை !

குழந்தை இங்கே வா!
கொஞ்சி முத்தம் தா!

பாலுஞ் சோறும் உண்ணு!
பத்து வரையில் எண்ணு!

அஆ இஈ என்றே
அப்பா வந்தால் சொல்லு!

பட்டுச் சட்டை தைப்பார்!
பதக்கம் வாங்கி வைப்பார்!

முத்துப் பல்லைக் காட்டு!
முன்னங் கையை நீட்டு!

சோற்றை வாயில் போடு!
சுவையாய்ப் பாடி ஆடு!





# வேண்டும்


பசிக்கு வேண்டும் சோறு!
பயிர் செழிக்க ஆறு!
வசிக்க நல்ல வீடு!
வாய் மணக்கப் பாடு!

கனி கொடுக்க மரம்!
கொண்டைக்குப் பூச் சரம்!
துணி எடுக்கக் காசு!
தூக்கி முன்னால் வீசு!

பள்ளிக் கூடம் போவேன்!
பாடம் நன்றாய்க் கேட்பேன்!
வெள்ளிப் பணம் பார்ப்பேன்!
வேண்டும் பொருளைச் சேர்ப்பேன்!





பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# குருவி

குருவி! குருவி! அருகில்வா!
குறுநொய் தருவேன் வாங்கிப்போ!
நெல்லைப் போன்ற உன்மூக்கும்,
நெல்லிக் காய்போல் உன்தலையும்,
கொய்யாப் பிஞ்சைப்
போல்உடலும்,
குழந்தை இடத்தில் காட்டவா!
சுறு சுறுப்புப் பிள்ளைநீ!
சோம்பல் என்றும் இல்லையே!
பறந்து பறந்து செல்லுவாய்!
பாட்டு ஒன்று சொல்லுவாய்!






# காக்கைப் பள்ளிக்கூடம்

பறந்து வந்த காக்கை யெல்லாம்
பள்ளிக் கூடம் போட்டதாம்!
மறந்து போன பாட்டை எல்லாம்
மீண்டும் மீண்டும் கேட்டதாம்!

கழுத்தைச் சாய்த்துக் காதை வளைத்துக்
கவனத் தோடு நின்றதாம்!
எழுத்தில்லாமல் ஏடில்லாமல்
எல்லாம் கற்றுக் கொண்டதாம்!

நந்தன் வீட்டுக் கூரை மேலே
நாளும் வந்து கூடுமாம்!
குந்தி யிருந்து பாடம் படித்துக்
கூடிப் பறந்தே ஓடுமாம்!

இரையைக் கண்டால் காகா வென்றே
இனத்தைக் கூவி அழைக்குமாம்!
உரையைக் கேட்டே காக்கை எல்லாம்
ஒன்றாய் உண்டு பிழைக்குமாம்!



# சேவல்

காலையிலே கண் விழிப்பாய் சேவலே! - நீ
கதிரவனை நின்றழைப்பாய் சேவலே!
வேலை யிதோ எந்தநாளும் சேவலே? - நீ
வேறு வேலை என்ன செய்வாய் சேவலே?

குப்பை மேட்டில் ஏறி நின்று சேவலே! - நீ
கொக்கரக்கோ கொக்கரக்கோ என்கிறாய்!
செப்பு வதற் கென்ன பொருள் சேவலே! - வந்து
சேர்ந்த இன்பம் என்ன கண்டாய் சேவலே!

அரும் பரும்பாய் அழகுமிக்கக் கொண்டையும்-
கூர்
ஆணி போல வன்மை சேர்ந்த மூக்கையும்,
திரும்பு கையில் ஆடுகின்ற தாடியும் - எங்குத்
தேடிப் பெற்றாய் என்று சொல்வாய் சேவலே!


# நாய்க்குட்டி !

நாய்க்குட்டி நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி!
தாய்க்கு நல்ல நாய்க்குட்டி!
தவறு செய்யா நாய்க்குட்டி!

எங்களோடு விளையாடும்;
இனிமையாகப் பழகிடும்!
அங்கும் மிங்கும் ஓடிடும்;
அழகு மிகுந்த நாய்க்குட்டி!


மொசுமொசுவென் றுடலிலே
முடிகள் தோய்ந்த நாய்க்குட்டி
கிசுகிசுக்கும் காதிலே!
கீழும் மேலும் பாய்ந்திடும்!


பாப்பா வோடு பழகிடும்!
பந்து போட்டால் பிடித்திடும்!
காப்பாய் எங்கட் கிருந்திடும்!
காதுநீண்ட நாய்க்குட்டி!



# பூனை

மியாவ் மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை!
கொட்டுக் காலுப் பூனை
கொள்ளிக் கண்ணுப் பூனை!
எட்டித்தாவி விரைவிலே
எலிபிடிக்கும் பூனை!
பண்டம் உருட்டும் பூனை
பாலைக்குடிக்கும் பூனை!
உண்டு விட்டு அடுப்பிலே
உறக்கம் கொள்ளும் பூனை!
மியாவ் மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை!





# ஒலிகள்

'க, கா' என்றே காகம் கரையும்!


'கி, கீ' என்றே கிளிகள் சொல்லும்!


'கு, கூ' என்றே குயில்கள் கூவும்!

'கெ, கே' என்றே கோழிகள் கேவும்!

'கொ, கோ' என்றே சேவல் கூவும்!

'கை, கௌக்' என்னும் வானங் கோழி!





# ஆசை

பாப்பா வுக்குப் பால் குடிக்கக்
கொள்ளை ஆசை - எங்கள்
பாட்டிக் கென்றும் கதை சொல்லக்
கொள்ளை ஆசை!

அம்மா வுக்குப் புடவை மேலே
கொள்ளை ஆசை! - எங்கள்
அப்பா வுக்கு மீசை மேலே
கொள்ளை ஆசை!

தாத்தா வுக்குப் பேரன் மேலே
கொள்ளை ஆசை! - இந்தத்
தங்கைக் கென்றும் பாட்டுப் பாடக்
கொள்ளை ஆசை!




# நிறங்கள்

மல்லிகைப் பூ வெள்ளை நிறம்
மாலை கட்ட உதவுமாம்!
புல்லும் இலையும் பச்சை வண்ணம்;
ஆ விரும்பி உண்ணுமாம்!

வானம் எங்கும் நீல வண்ணம்;
வட்ட நிலா நீந்துமாம்!
கானக் கிளியின் மூக்குச் சிவப்பு;
கனியைக் கடித்துத் தின்னுமாம்!

எலுமிச் சம்பழம் மஞ்சள் நிறம்;
எங்கும் பழுத்துத் தொங்குதாம்!
உலவும் காக்கை கறுப்பு வண்ணம்;
ஒளிந்து திருடித் தின்னுமாம்!





# முயற்சி!

சிலந்தி வலையைப் பாருங்கள்!
சின்னஞ் சிறிய பூச்சியே!
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!

தேனீக் கூட்டைப் பாருங்கள்!
திறமை யோடு ஒற்றுமை
பேணி, வீட்டைக் கட்டுமே!
பெரிய முயற்சி வேண்டுமே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்!
எள்ளைப் போன்ற எறும்புகள்
அருமை யான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன!


குருவிக் கூட்டைப் பாருங்கள்!
குடுக்கை போன்று பின்னியே,
விரைவில் கட்டி முடிக்குமே!
வேண்டும் முயற்சி என்றுமே!


# பாதையில் நடத்தல்

எப்பொழுதும் பாதையில்
இடது பக்கம் நடந்து போ!
தப்பில் லாமல் நடப்பதால்,
தடைகள் வாய்ப்ப தில்லையே!

நடந்து போகும் மேடையில்
நடந்து செல்லல் நல்லது!
கடந்து போக, இரு புறம்
கவனி; பின்பு விரைந்து போ!

படித்துக் கொண்டு நடப்பதும்,
பந்து தட்டிப் போவதும்,
இடித்துக் கொண்டு செல்வதும்,
என்றும் தீங்கு செய்யுமே!






# மின்சாரம்

விசையைத் தட்டி விட்டதும்
விளக்குப் பற்றிக் கொள்ளுமாம்!
விசையைத் திருப்பி வைத்ததும்
வாய்திறந்து பேசுமாம்!

விசையை முடுக்கி விட்டதும்
விசிறி நன்கு சுழலுமாம்!
விசையைக் காதில் வைத்ததும்
விளம்பும் பேச்சு கேட்குமாம்!

கம்பிக் குள்ளே செல்லுமாம்!
கையில் தொட்டால் கொல்லுமாம்!
தம்பி! அதுபேர் 'மின்சாரம்'
தண்ணீர் தந்த விசையாகும்!





# குடையும் செருப்பும்

குடையும் செருப்பும் பேசின - பல
குறைகள் சொல்லி ஏசின.
நடையில் நடந்த நாடகம்!- இதை
நாமெல் லாரும் பாடுவோம்!


குடை: செத்த மாட்டின் உறுப்பே - தோல்
செருப்பே! உன்மேல் வெறுப்பே!

செருப்பு: முகத்தைப் பார்த்தால் கறுப்பே -
உடல் முழுதும் கம்பி விரிப்பே!

குடை: காலில் கிடக்கும் எருமை! - உன்
கதையில் என்ன பெருமை!

செருப்பு: நெருப்பின் மீது நடப்பேன் -
குத்தும் நெருஞ்சி முள்ளில்
படுப்பேன்!

குடை: நிழலை என்றும் கொடுப்பேன் -
வந்து நனைக்கும் மழையைத்
தடுப்பேன்.



| | |
|---|---|
| செருப்பு: | காற்றால் உனக்கு நடுக்கம் - நல்ல<br>கடும் இருட்டில் ஒடுக்கம்! |
| குடை: | நீரைக் கண்டு நெருங்கி - நீ<br>நனைவாய் உடலும் சுருங்கி! |
| செருப்பு: | இரவும் பகலும் நண்பன் -<br>யார்க்கும் என்னால் இல்லை<br>துன்பம்! |
| குடை: | கையில் பிடித்து மதிப்பார் -<br>உனைக் காலில் போட்டு மிதிப்பார்! |
| செருப்பு: | உனையும் நானே சுமப்பேன் -<br>இதை உணர்ந்து கொள்ளு வாயே! |
| குடை: | உனக்கும் நிழலைக் கொடுப்பேன் -<br>இதை உணர்ந்து கொள்வாய் நீயும்! |
| செருப்பு: | மேலே நின்று காப்பாய் - கீழ்<br>மண்ணில் தங்கிக் காப்பேன்; |
| குடை: | நமக்குள் எதற்குப் பகையே - இனி<br>நண்ப ராகிப் போவோம்! |




# புகைவண்டி விளையாட்டு

புகையில் லாமல் கரியில் லாமல்
போகுது வண்டி குப் குப் குப்!
வகைவகை யான வண்டித் தொடர்கள்
வருமாம் பின்னே குப் குப் குப்!

கடைசிப் பெட்டி சின்னப் பெட்டி!
காலில் சிலம்பின் ஒலிகேட்கும்!
அட - அட - முன்னால் இழுபொறி ஒன்று
அந்தப் பிள்ளை மான் கன்று!

குச்சியில் கட்டிய செங்கொடி காட்டக்
குலுங்கி நின்றது தொடர்வண்டி.
பச்சைக் கொடியைக் காட்டினான் ஒருவன்!
பாம்பாய் நகர்ந்தது புகைவண்டி!

உரத்த குரலில் ஊதல் செய்தான்,
ஓங்கி வளர்ந்த ஒரு பையன்!
மரத்தைச் சுற்றிப் போனது வண்டி;
மணல் வெளி எங்கும் சுற்றிடுமாம்!



இடையில் இடையில் நின்றது வண்டி;
ஏறி இறங்கினர் பல பேர்கள்!
நடைதான்! இரும்புச் சக்கரம் இல்லை!
தண்ட வாளம் நடைபாதை!

கால்கள் வலித்தன; உடல்கள் சோர்ந்தன;
களைத்துப் போனது புகைவண்டி!
வாலைப் போலும் நீண்டிணைந் திருந்த
வண்டிகள் கழன்றன ஒவ்வொன்றாய்!

வெட்ட வெளியில் மாலைப் பொழுதில்
விளையா டுவமே புகைவண்டி!
கொட்டும் மழையில் கொளுத்தும் வெயிலில்
குப் குப் வண்டி செல்லாதே!



# வீட்டைக் கட்டினான்

மண்ணைப் பிசைந்தான்;
கல்லை உடைத்தான்;
'மள மள'வென்றே சுவர் வைத்தான்!

திண்ணை அமைத்தான்;
படிகள் வைத்தான்;
தண்ணீர்த் தொட்டி ஒன்றமைத்தான்!

மரத்தைப் பிளந்தான்!
பலகை அறுத்தான்!
'மழ மழ'வென்றே அதை இழைத்தான்!

அரத்தைக் கொண்டும்,
ஆணிகள் கொண்டும்
அழகுக் கதவுகள் பல செய்தான்!

கம்பியை வளைத்தான்;
பலகணி செய்தான்!
கட்டி முடித்தான் ஒரு வீட்டை!

தம்பியும் மகிழ்ந்தான்!
தங்கையும் மகிழ்ந்தாள்!
தாயும் தந்தையும் மகிழ்ந்தனரே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# கடல்

தம்பி, தம்பி கடலைப் பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்!

வெள்ளைக் குதிரை போலவே
விழுந்து புரளும் அழகைப் பார்!

நீலப் பாயின் மேலேறி
நீட்டிப் படுக்கும் அலையைப் பார்!

கோலக் கடலின் மடிமீதில்
குதித்து விழுகும் அலையைப் பார்!

நீர்க்குள் புரண்டே களைத்துப் போய்
நிலத்தைத் தாவும் அலையைப் பார்!

கரையின் மடியில் புரள்வதைப் பார்;
கடலுள் மீண்டும் உருள்வதைப் பார்!

தம்பி, தம்பி கடலைப் பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்!


# நிலா!

பொட்டு நிலா! பொட்டு நிலா!
போவ தெங்கே? சொல்வாய்!
வட்ட நிலா! வட்ட நிலா!
வருவேன்; கொஞ்சம் நிற்பாய்!

துணையில் லாமல் விண்மீன் காட்டில்
தனியாய்ப் போவது எங்கே?
அணையில் லாத வானக் கடலில்
அலைந்து போகும் சங்கே!

பள்ளிக் கூடம் போகின் றாயோ?
பையை எங்கே காணோம்?
வெள்ளிக் குடமே! மிதந்து செல்வாய்!
விரைவேன், துணையாய் நானும்!





# கடிகாரம்

ஒன்று இரண்டு பனிரண்டு!
ஓடும்; பாடும் மணி உண்டு!

பெரிதாய்ச் சிறிதாய்க் கை உண்டு;
பேசும் 'டிக் டிக்' மொழி உண்டு!

முன்னங் கையில் கட்டிடலாம்!
மிசையின் மீதே வைத்திடலாம்!

சுவரில் தொங்கப் போட்டிடலாம்!
சொல்லும் மணியைக் கேட்டிடலாம்!

முணகிக் கொண்டே ஓடிடுமாம்!
முறுக்கா விட்டால் நின்றிடுமாம்!

அம்மா சுட்டாள் பணிகாரம்!
ஆனால் இதன்பேர் கடிகாரம்!

# மிதமாய் உண்பது மிகுதியும் இன்பமே!

பயிற்றங்காய்க் குழம்பு
பசிக்குமேல் உண்டேன்!
வயிற்றை வலித்தது
வாந்தியும் வந்தது!

மருத்துவர் வந்தார்!
மருந்துகள் தந்தார்!
பருத்த வயிறும்
பள்ளமாய்க் கழிந்தது!

அதிகமாய் உண்பதே
அனைவர்க்குந் துன்பம்!
மிதமாய் உண்பது
மிகுதியும் இன்பமே!





# பள்ளிக்குப் போ!

பள்ளிக் கூடம் திறந்தது!
பையைத் தூக்கிக் கொள்ளுவாய்
வெள்ளைச் சட்டை போடுவாய்!
விரைந்து சென்று கூடுவாய்!

கன்று போல ஆடிப்போ!
காக்கைப் பாட்டுப் பாடி வா!
ஒன்று இரண்டு கற்று வா!
உரல் ஊஞ்சல் எழுதி வா!

ஒழுக்கம் அன்பு கற்று வா!
உடற் பயிற்சி பெற்று வா!
அழுக்கு நெஞ்சைத் தூய்மை செய்!
அடக்கம், அமைதி, வாய்மை வை!

பாட்டும் கதையும் படித்து வா!
பண்பைக் கடைப் பிடித்து வா!
நாட்டுப் பற்றை வளர்த்து வா
நமது மொழியைக் கற்று வா!



# திருக்குறள்

பெரிய வர்க்குப் பெரியநூல்!
சிறிய வர்க்கோர் அரியநூல்!
உரிய வர்க்கும் உரிய நூல்!
உலகில் யார்க்கும் உயர்ந்த நூல்!

அன்பைப் பற்றிச் சொல்லுமே!
அறத்தை விளக்கிக் கூறுமே!
பண்பை எடுத்துக் காட்டுமே!
பணிவை உயர்வை ஊட்டுமே!

உலகில் யார்க்கும் ஒரு குரல்!
உண்மை பேசும் திருக்குறள்!
பலவும் அறிந்து கொள்ளலாம்!
படித்து மடமை தள்ளலாம்!

# பத்துக் கட்டளைகள்!

உண்மைக்குப் புறம்பாய்
உரைகள்செய் யாதே!
ஊக்கத்தை என்றும்
குறைத்து விடாதே!
திண்மையாய் எதனையும்
தேர்ந்திட முயற்சிசெய்!
தேர்ந்ததை என்றும்
செய்திட பழகு!



நல்லவர் நட்பையே
நயந்து பெற்றிடு!
நம்பிடும் முன்னர்
நால்வழி எண்ணு!
வல்லவர் துணையை
வலிந்து போற்றிடு!
வறுமையால் உள்ளம்
வாடி விடாதே!

எவரையும் அன்பால்
இன்புறச் செய்வாய்!
எதனையும் அறிவால்
எண்ணிமேற் கொள்வாய்!
இவற்றை நினைவில்வை
என்றும் மறவாதே!
எதிர்ந்த நாளெல்லாம்
இன்புறும் நாள்களே!

# உழைப்புக்கு விளைவுண்டு !

உண்மைக் கென்றும்
மதிப்புண்டு - நல்ல
உழைப்புக் கென்றும்
விளைவுண்டு!
திண்மைக் கென்றும்
துணிவுண்டு - மனத்
தெளிவுக் கன்பின்
கனிவுண்டு!

பொறுமைக் கென்றும்
வழியுண்டு - உளப்
பொறாமைக் கென்றும்
நலிவுண்டு!
வெறுமைக் கென்றும்
இழிவுண்டு! - நல்ல
விளைவுக் கென்றும்
புகழுண்டு!



## பாவேந்தர் பாரதிதாசன்



பாட்டுக்கு வேந்தர்
பாவேந்தர் - அவர்
பாரதிதாசன்
எனும் வேந்தர்!- தம்பி

ஏட்டுக்கு ஏடு
எழில்கொழிக்கும் - அவர்
எழுத்துக்கு எழுத்து
தமிழ் மணக்கும்! (பாட்டுக்கு)

கூட்டுக்குள் ஆவி
தமிழ் என்றார் - அவர்
குரலுக்குக் குரலால்
நமை வென்றார்! - நம்

வீட்டுக்கு வீடு
அவர் பாடல் - பெரும்
வீதிக்கு வீதி
அவர் புகழாம்! (பாட்டுக்கு)

நரம்புக்கு நரம்பு
உணர்வேறும் - உயிர்
நாடிக்கு நாடி
தமிழ் ஊறும்!

கரம்புக்கு உழவாய்
மனம் உழுதார் - நல்ல
கழனிக்கு மழையாய்த்
தமிழ் பொழிந்தார்! (பாட்டுக்கு)

இருளுக்கு ஒளியாய்
அவர் திகழ்ந்தார் - நல்ல
இயற்கைக்கு உயிராய்
எழில் கொடுத்தார்!

மருளுக்கு மருந்தாய்த்
தமிழ் விளைத்தார் - தம்பி!
மடமைக்கு எதிராய்ப்
போர் தொடுத்தார் (பாட்டுக்கு)



# நாள் ஒழுக்கம்!


கதிருக்கு முன்னெழு!
கடமைகள் வரிசை செய்!
நூலொடு தொடர்பு கொள்!
நோதவிர் பயிற்சி செய்!
மயக்கிலா உண்டி கொள்!
மாண்பொடு பள்ளி செல்!

ஆசிரியர்த் தழுவு!
அன்பரில் நண்பு தேர்!
கல்கேள் பட்டறி!
கரவிலா உறவு கொள்!
மாலை உடல் பயில்!
மறாமல் கல்வி தேர்!



இரவூண் குறைத்துண்!
எதிரிரா விழித்திரேல்!
என்றும் தனிப்படு!
இடக்கைப் புறந்துயில்!
பெரியோர் வழித்தொடர்!
பெற்றவர் மகிழ்வு செய்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# அணி பொருள்!

மண்ணில் விளைவது தங்கம்!
மங்கை வளையல் தங்கம்!

கடலில் விளைவது முத்து!
கண்ணகி மாலை முத்து!

நிலத்தில் கிடைப்பது வெள்ளி!
நிலாவின் காப்பும் வெள்ளி!

கடலில் இருப்பது பவளம்!
கலைவிழி கழுத்தில் பவளம்!

கரியில் முதிர்வது வைரம்!
கனிமொழி கம்மல் வைரம்!



# பொன்னன் கதை!



பொன்னன் ஒருநாள் தெருவழியே
போய்க்கொண் டிருந்தான்; அவன்முன்னே
நன்னன் வந்தான்; அவன் இவனை
நாடகம் பார்க்கக் கூப்பிட்டான்!

இருவரும் நாடகம் பார்த்தார்கள்!
இரவில் வீடு திரும்புகையில்
ஒருவன் வந்தான், "பொன்னா! உன்
உறவினர் ஒருவர் இறந்தாராம்;

செய்தியைக் கேட்டே உன்பெற்றோர்
செங்கற் பட்டு சென்றுள்ளார்;
பொய்யிலை, உன்னை என்னோடு
புறப்பட் டங்கே வரச்சொன்னார்;

எடு எடு போவோம்" என்றழைத்தான்!
இவனைத் தெரியான் அவனெனினும்
விடுவிடு என்றே நன்னனையும்
வீட்டிற் கனுப்பிப் புறப்பட்டான்!

பெற்றோர் பொன்னனைக் காணாமல்
பெரிதும் வருந்தினர்; அங்கங்கே
உற்றார் உறவினர் ஊரிலெல்லாம்
ஓடினர்; தேடினர்; பயனில்லை!

நாட்கள் மூன்று நடந்தனவே!
நன்னனும் செய்தியை அவர்க்குரைத்தான்!
ஆட்கள் பலரும் திசைக்கொருவர்
அவனைத் தேடி அலைந்தனரே!

இப்படி யிருக்கையில் ஒருநாளில்
எங்கிருந் தோஒரு மடல்வரவே
அப்பா அம்மா பிரித்தார்கள்!
அதிலே பொன்னன் வரைந்திருந்தான்!

"அப்பா என்னை உயிரோடே
அழைத்துப் போக வேண்டுமெனில்
தப்பா மல்ஆ யிரம்உருபா
தரங்கம் பாடிக் கடற்கரையில்

வரும்ஞா யிற்றுக் கிழமையிலே
வைத்திட வேண்டும்; இச்செய்தி
ஒருவரும் அறிந்திடக் கூடாதே!
அறிந்தால் உயிரும் இருக்காதே"

-என்றே எழுதி விடுத்திருந்தான்!
இதனைப் படித்த பெற்றோர்கள்,
அன்றே நகைகளை விற்றார்கள்
அந்தத் தொகையைச் சேர்த்தார்கள்!

பொன்னன் குறித்த அந்நாளில்
போனார் தந்தை தொகையோடு!
பொன்னன் வந்தான்; ஆயிரமும்
போனது போனது வீணாக!

பொன்னனைப் போலப் பிள்ளைகளும்
போவதும் எவர்பின், எங்கென்றே
முன்னறி வின்றிப் போவார்கள்!
முடிவில் தொல்லையும் வைப்பார்கள்!

வந்தவன் பின்னே சென்றதனால்
வந்தது தீங்கு! பெற்றோரும்
நொந்தனர்! ஆயிரம் உருபாவும்
நொடியில் பறந்து போனதன்றோ?



படிப்பறி விருந்தால் போதாது;
பட்டறி வோடே உலகறிவும்
படிப்பறி வோடு பயன்படுமாம்
பாடம் பொன்னன் கதையாகும்!



# பழியன்றோ மிஞ்சும்!

ஆங்கிலத்தைக் கற்பதுதான்
உயர்வா? - பாப்பா
அழகுதமிழ் கற்றுவரல்
அனைத்துக்கும் தாழ்வா?

தாங்கிலையே உன்முடிவை
பாப்பா - தமிழ்த்
தாய்மொழியைத் தள்ளிவிடல்
இனத்திற்குக் காப்பா?

கொச்சைத்தமிழ் பேசுவது
நன்றா? - பாப்பா
கொஞ்சுதமிழ் பிழையின்றிப்
பேசுவது நன்றா?

பச்சைத்தமிழ்ப் பாலினிலே
நஞ்சைப் - பாப்பா
பாய்ச்சுவதும் கேடன்றோ?
பழியன்றோ மிஞ்சும்!



# தமிழ் படித்தால் வாழ்வு புதுமைபெறும்!

அறம் பெருகும் தமிழ் படித்தால்;
அகத்தில் ஒளி பெருகும்!
திறம் பெருகும்; உரம் பெருகும்;
தீமைக் கெதிர் நிற்கும்
மறம் பெருகும்; ஆண்மை வரும்!
மருள் விலகிப் போகும்!
புறம் பெயரும் பொய்மை யெலாம்!
புதுமை பெறும் வாழ்வே!



'தென்மொழி'யாம், 'தமிழ்நில'மாம், 'தமிழின் சிட்'டாம்
திசையெங்கும் இசைபாடும் இதழ்க ளாலே
தொன்மொழியாம் தனித்தமிழால் இனவு ணர்வால்
துணிச்சலுடன் எழுச்சிதரும் மெய்ம்மைப் பித்தன்!
புன்மொழிக்கும், எதிர்ப்புகட்கும் துவண்டி டாமல்
பொதுத் தொண்டில் நடைபோடும் துரை மாணிக்கம்!
தென்மொழியே குறிக்கோளாய்க் கொண்ட செம்மல்
தேன்றமிழின் சித்திரனார் இவர்தாம் பாரீர்!

புலவர் திருக்குறள் நாவை சிவம்